**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**

**முன்னிலை:திரு.S.B.சுஜித், B.A.B.L(Hons).,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**பட்டிகை வழக்கு எண்.84/2018**

**(CNR.NO:TNRM05-000486-2018)**

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>இராமேஸ்வரம் நகர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.31/2018 |

**எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | சரவணன் |
| 3. | த/பெ | : | சிவாஜி |
| 4. | தொழில் | : | லாரி ஓட்டுநர் |
| 5. | முகவரி | : | கொடுமுடி, ஈரோடு. |
| 6. | வயது | : | -- |

| | | | |
|---|---|---|---|
| 7. | சம்பவ நாள் | : | 15.02.2018-ம் தேதி 07.45 மணி |
| 8. | புகார் தேதி | : | 15.02.2018-ம் தேதி 09.00 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 15.02.2018 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 15.02.2018 ம் தேதி நிலையப் பிணையில் சென்றுள்ளார். |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 12.10.2018 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 16.04.2021 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 25.03.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | பிரிவுகள். 279, 304(A) இதச படி |
| 15. | வினவப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | பிரிவுகள். 279, 304(A) இதச படி |

| | | | |
|---|---|---|---|
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | முதல் விசாரணை / எதிரி தரப்பு குறுக்கு விசாரணை<br><br>அ.சா.1 – 29.01.2026 / அ.சா.1 – 29.01.2026<br>அ.சா.2– 23.02.2026 / அ.சா.2– 23.02.2026 |
| 18. | எதிரியிடம் பிரிவு 313(i)(b) Crpc/ 351(i)(b) BNSS படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 25.03.2026 |
| 19. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரி/குற்றமுறையிட்டாளார் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 22. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | i) எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.2047/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 22.08.2019 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.<br><br>ii) எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.346/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 25.02.2021 ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.<br><br>Iii) எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான |

மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.6289/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 25.11.2024ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 23. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு.சொக்கேசன் |
| 24. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | திரு.M.நாகேந்திரன் |
| 25. | எதிரியின் கூற்று | : | எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 26. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 27.03.2026 |
| 27. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 27.03.2026 |
| 28. | நீதிபதியின் முடிவு | : | **முடிவாக எதிரி பிரிவுகள். 279, 304(A) இதச படி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 248(1) குவிமுச–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் குற்றம்சாட்டப்பட்டவர் எழுதி கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகும் என உத்தரவிடப்படுகிது.** |

இவ்வழக்கு 12.10.2018 தேதியன்று குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் (இனி கீழ் வரும் இடங்களில் **குவிமுச** என்று குறிப்பிடப்படும்) பிரிவு 190(1)ன் படி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.நாகேந்திரன் அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று, இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

1.**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

கடந்த 15.02.2018 ம் தேதி காலை 07.45 மணிக்கு இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய எல்கைக்குட்பட்ட அக்னி தீர்த்த கடற்கரைக்கு போகும் ரோட்டில் அயோத்தி காட்டேஜ் முன்பாக இடது ஓரமாக (கிழக்கு பக்கம்) இவ்வழக்கில் இறந்த ரமாமணி சுவைன் என்பவர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்த போது இவ்வழக்கின் எதிரி TN 33 Z 2435 என்ற எண் கொண்ட சத்யா வாட்டர் சப்ளை லாரியை அதே ரோட்டில் அதே திசையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று, இடது ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்த ஒடிசா மாநிலம், பத்ராக் மாவட்டம், சிந்தாள் போஸ்டைச் சேர்ந்த மீனாக்காட்டன் மனைவி ரமாமணி சுவைன் என்பவர் மீது மோதி லாரியின் டயர் ஏறி இறங்கியதில் ரமாமணி சுவைனின் உடல் முழுவதும் நசுங்கி அந்த இடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியும், முன்னால் சென்ற TN 28 AB 6674 என்ற எண் கொண்ட TATA Sumo காரின் பின்பகுதியில் மோதி காரின் பின்பக்கம் முழுவதும் சேதப்படுத்தியும், பின்பு அதே இடத்தில் எதிரே வந்த KL 07 BK 9027 என்ற எண் கொண்ட வெள்ளை நிற Innova காரின் வலதுபுறம் உரசி சேதம் ஏற்படுத்தி குற்றம் புரிந்ததாக குற்றம்சாட்டப்பட்டவரான எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இந்திய தண்டனை சட்டம், 1860 (இனி கீழ் வரும் இடங்களில் '**இதச**' என்று குறிப்பிடப்படும்) படி இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு பிரிவு 204 குவிமுச கீழ் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அழைப்பாணை அனுப்பியதன் பெயரில் குற்றம் சாட்டப்பட்டவர் இந்த நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 குவிமுச படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம் சாட்டப்பட்டவருக்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு குற்றம் சாட்டப்பட்டவர் மீது பிரிவு 251 குவிமுச படி, பிரிவு 279, 304(A) இதச படி குற்றச்சாட்டு குறித்து விளக்கி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த பிரிவு 242(1) குவிமுச கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1, அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 கண்ணுற்ற சாட்சி, அ.சா.2 புலன் விசாரணை அதிகாரி.

5. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:</u>**

அ.சா.1 மணிகண்டன் தனது சாட்சியத்தில் தான் தற்போது இராமேஸ்வரத்தில் குடியிருந்து யாத்திரை பணியாளர் வேலை செய்து வருவதாகவும், தான் 8 வது படித்துள்ளதாகவும், தனக்கு இந்தி பேச தெரியும் மற்றும் மொழி பெயர்க்கத் தெரியும் எனவும், வழக்கு விபத்தில் காயமடைந்த மற்றும் பாதிக்கப்பட்ட நபர்கள் ஒடிசா மாநிலத்தை சேர்ந்தவர்கள் எனவும், சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு வழக்கில் பாதிக்கப்பட்ட நபரின் மனைவி தன்னிடம் உங்களுக்கு இந்தி தெரியுமா என்று இந்தியில் கேட்டதாகவும், அப்போது தான் கோவிலுக்கு வெளியே இருந்ததாகவும், அப்போது காலை சுமார் 10.00 மணி இருக்கும் எனவும், தான் அவரிடம் இந்தி தெரியும் என கூறியதாகவும், அதனால் அவர் தன்னிடம் தானும் தனது வீட்டுக்காரரும் நடந்து வந்து கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டுவிட்டது என சொன்னதாகவும், எந்த இடம் என்று தற்போது தனக்கு தெரியவில்லை எனவும், விபத்தில் இறந்துபோன பெண்ணின் கணவருக்கு இராமேஸ்வரம் ஜி.எச்.ல் பிரேத பரிசோதனைக்கு உதவி செய்ததாகவும், பின்னர் இராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு மொழி பெயர்ப்பாளராக இருந்து உதவி செய்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்ததாக

சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 பிரபு தனது சாட்சியத்தில் தான் தற்போது மதுரையில் தமிழ்நாடு மின்சார வாரிய விழிப்பு பணியில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்பு கடந்த 2018ம் ஆண்டு இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியாற்றியும் கடந்த 15.02.2018ம் தேதி மேற்படி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.லோகநாதன் என்பவர் ஒடிசா மாநிலம் மீனாக்காட்டன் மகன் இராஜேந்திரா சுவைன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய குற்ற எண் 31/2018 சட்டப்பிரிவுகள் 279, 304 A இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும் புகார் அ.சா.ஆ.1 எனவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 எனவும், தனது புலன்விசாரணைக்கு வைத்ததை பார்வையிட்டு காலை 10.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான இராமேஸ்வரம் அயோத்தி காட்டேஜ் முன்பு சென்று வரவழைக்கப்பட்ட சாட்சிகளான ஆரோக்கியநாதன், மரிய ஜெயபாலன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.3 எனவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 எனவும், பின்பு இராமேஸ்வரம் அரசு மருத்துவமனை சென்று சவக்கிடங்கில் இருந்த விபத்தில் இறந்துபோன இரமாமணி என்பவரது இறந்த பிரேதத்தின் மீது சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டதாகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 எனவும், பிரேத விசாரணை முடித்து இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதத்தின் மூலம் தலைமை காவலர் 720 முருகன் அவர்களை அனுப்பிவைத்ததாகவும், பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் இராஜேந்திரா சுவைன், மீனா காட்டன், இராஜகணேஷ், இராதகிருஷ்ணன் நாயர், மணிகண்டன், ஆரோக்கிய நாதன், மரிய ஜெயபாலன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கில் இறந்துபோன ரமாமணி என்பவரை அதிவேகமாகவும்

அஜாக்கிரதையாகவும் TN 33 Z 2435 என்ற லாரியை ஓட்டி வந்து வாகன விபத்தை ஏற்படுத்திய ஈரோடு சரவணன் என்பவரை வழக்கு விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரிந்ததால் இராமேஸ்வரம் ஜெ.ஜெ.நகர் கார் பார்க்கிங் முன்பு வைத்து 16.30 மணிக்கு கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க விசாரணைக்கு பின்பு இருநபர் ஜாமினில் விடுவித்ததாகவும், பின்பு 16.02.2018ம் தேதி இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனம் TN 33 Z 2435 என்ற லாரி மற்றும் வாகன விபத்தில் சேதமடைந்த டாடா சுமோ TN 28 AB 6674, இனோவா KL 07 BK 9028 ஆகிய வாகனங்களை வேண்டுகோள் கடிதத்தின் மூலம் இராமநாதபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பெற அனுப்பிவைத்ததாகவும், 12.04.2018ம் தேதி வாகன ஆய்வறிக்கை பெற்றும் சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் இராமநாதபுரம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேற்சொன்ன 3 வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ. 6 முதல் அ.சா.ஆ.8 எனவும், பின்பு 14.06.2018ம் தேதி இந்த வழக்கில் இறந்துபோன நபரின் உடலை பிரேத பரிசோதனை செய்த இராமேஸ்வரம் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.மீனாகுமாரி அவர்களிடம் சான்று பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.9 எனவும், பின்பு சாட்சிகள் தலைமைக் காவலர் 720 முருகன் மற்றும் உதவி ஆய்வாளர் திரு.லோகநாதன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து இவ்வழக்கின் எதிரி மீது 279, 304A இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து கணம் நீதிமன்றம் அனுப்பிவைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

## Questioning U/s.313(i)(b) Crpc

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக உள்ளவை குறித்து

குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

**<u>Point for determination</u>**

**7. இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 279, 304(A) படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.**

<u>இருதரப்பு வாதங்கள்</u>

8. இவ்வழக்கில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 தனது வாதத்தில், கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 மற்றும் அ.சா.3 காவல் ஆய்வாளரின் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

9. குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில் புகார்தாரர் விசாரிக்கப்படவில்லை எனவும், கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் சாட்சியமளிக்கவில்லை எனவும், அ.சா.2 காவல் ஆய்வாளரின் சாட்சியமானது சம்பவத்திற்கு பின்பு நடந்த விபரங்கள் குறித்து அமைந்து இருப்பதாலும் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்று முடிவு செய்ய முடியாது. எனவே, குற்றம்சாட்டப்பட்டவரை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

## Appreciation of Evidence

10. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட புகார்தாரரான பட்டியல் சாட்சி 1 ராஜேந்திர சுவைன் மற்றும் கண்ணுற்ற சாட்சிகளான வழக்கு பட்டியல் சாட்சி 2 மீனக்காட்டான் சுவைன் ஆகியோர்கள் ஒரிசா மாநிலம் பதாக் மாவட்டத்தில் வசித்து வருவதாகவும், மேற்சொன்னவர்களின் முகவரிக்கு பதிவுத் தபால் அனுப்பப்பட்டும், மேற்சொன்ன சாட்சிகள் அரசுத்தரப்பில் இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த இயலாது என்று சத்திய பிரமாண வாக்குமூலம் ஆய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்டு மேற்சொன்ன சாட்சிகள் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளார்கள். மேலும் சாட்சி 3 ராஜகணேஷ், சாட்சி 4 ராதாகிருஷ்ணன், பார்வை மகஜர் சாட்சிகளான வழக்கு பட்டியல் சாட்சி 6 ஆரோக்கிய நாதன், சாட்சி 7 மரிய ஜெயபாலன் ஆகியோர்கள் சம்பவ நடந்த காலங்களில் வாடகை வீட்டில் குடியிருந்து வந்ததாகவும், தற்போது அந்த முகவரியில் இல்லாததால் பதிவுத்தபால் அனுப்பப்பட்டு திரும்ப கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், எனவே மேற்சொன்ன சாட்சிகள் விலக்கிக்கொள்ளப்பட வேண்டுமென்று சத்திய பிரமாண வாக்குமூலம் ஆய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் அரசுத்தரப்பில் மேற்சொன்ன சாட்சிகள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளார்கள். மேற்சொன்ன காரணங்களால் இவ்வழக்கின் மோட்டார் வாகன ஆய்வாளர் வழக்கு பட்டியல் சாட்சி 8 விஸ்வநாதன், மருத்துவர் வழக்கு பட்டியல் சாட்சி 9 மோகன கண்மணி, வழக்கு பட்டியல் சாட்சி 10 முருகன், வழக்கு பட்டியல் சாட்சி 11 லோகநாதன் ஆகியோர்கள் அரசுத்தரப்பால் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது.

11. வழக்கு சம்பவம் குறித்து அரசு தரப்பு சாட்சிகளை பரிசீலனை செய்கையில், கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 மணிகண்டன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் வழக்கில் பாதிக்கப்பட்ட நபரின் மனைவி தன்னிடம் தனக்கும், தனது வீட்டுக்காரருக்கும் நடந்து வந்து கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டதாக சொன்னதாகவும், விபத்தில் இறந்த போன பெண்ணின் கணவருக்கு இராமேஸ்வரம்

GH–ல் பிரேத பரிசோதனைக்கு உதவியதாகவும், இராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு மொழி பெயர்ப்பாளராக இருந்து உதவி செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 குறுக்கு விசாரணையின் போது விபத்தில் பாதிக்கப்பட்டவர் சொல்லிதான் தனக்கு தெரியும் எனவும், சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை எனவும் சாட்சியமளித்துள்ளதன் மூலமாக அவர் வழக்கு விபத்தை நேரடியாக கண்ணுற்ற சாட்சி இல்லை என்பது தெரியவருகிறது. மேலும் எதிரி தான் விபத்தை ஏற்படுத்தினார் என்றோ, எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்பது குறித்தோ, எந்த இடத்தில் விபத்து இடத்தில் ஏற்பட்டது என்பது குறித்தோ எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை. கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 ன் சாட்சியம் போலீசார் விசாரணை வாக்குமூல சங்கதிகளுக்கு முரண்பாடாக அமையப்பெற்றுள்ளது தெரியவருகிறது.

12. அ.சா.2 பிரபு என்பவர் சம்பவம் நடைபெற்ற பிறகு மேற்கொண்ட புலன்விசாரணை தொடர்பாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 மூலம் முன்னிறுத்தப்பட்ட அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 7 ன் கீழ் இவ்வழக்கின் சங்கதிகள் relevant fact ஆக இருந்தாலும் சம்பவத்திற்கு பிறகு மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பாகவே அரசுத்தரப்பில் முன்னிடப்பட்டுள்ளது. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சி எதிரி மீதான குற்றச்சாட்டு தொடர்பாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும் பாதிக்கப்பட்ட சாட்சிகளான வழக்கு பட்டியல் சாட்சி 1, 2 ஆகியோரும் நீதிமன்றத்தில் அரசுத்தரப்பில் விசாரிக்கப்படாத சூழ்நிலையில் இந்த வழக்கின் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையான (fact in issue), கடந்த 15.02.2018 ம் தேதி காலை 07.45 மணிக்கு இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய எல்கைக்குட்பட்ட அக்னி தீர்த்த கடற்கரைக்கு போகும் ரோட்டில் அயோத்தி காட்டேஜ் முன்பாக இடது ஓரமாக (கிழக்கு பக்கம்) இவ்வழக்கில் இறந்த ரமாமணி சுவைன் என்பவர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்த போது

இவ்வழக்கின் எதிரி TN 33 Z 2435 என்ற எண் கொண்ட சத்யா வாட்டர் சப்ளை லாரியை அதே ரோட்டில் அதே திசையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று , இடது ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்த ரமாமணி சுவைன் என்பவர் மீது மோதி லாரியின் டயர் ஏறி இறங்கியதில் ரமாமணி சுவைனின் உடல் முழுவதும் நசுங்கி அந்த இடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியும், முன்னால் சென்ற TN 28 AB 6674 என்ற எண் கொண்ட TATA Sumo காரின் பின்பகுதியில் மோதி காரின் பின்பக்கம் முழுவதும் சேதப்படுத்தியும், பின்பு அதே இடத்தில் எதிரே வந்த KL 07 BK 9027 என்ற எண் கொண்ட வெள்ளை நிற Innova காரின் வலதுபுறம் உரசி சேதம் ஏற்படுத்தியதாக சொல்லப்பட்ட சம்பவம் நடைபெற்றதாக அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் சாதாரணமாக நம்பும்வகையில் அமையவில்லை.

13. எனவே, எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட பிரிவுகள் 279, 304(A) இதச வின் கீழ் குற்றச்சாட்டை புரிந்ததாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது. எனவே அரசுத்தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது

14. முடிவாக, இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் பிரிவுகள் 279, 304(A) இதச படி குற்றவாளி இல்லை என தீர்மானித்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

15. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

16. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் 15.02.2018 ம் தேதி கைது செய்யப்பட்டு அன்றைய தினமே நிலைய பிணையில் சென்றுள்ளார். குற்றம்சாட்டப்பட்டவர் எழுதி

கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.27 17:05:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**அரசுத் தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | – | மணிகண்டன் |
| அ.சா.2 | – | பிரபு |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 15.02.2018 | புகார் மனு |
| 2. | அ.சா.ஆ.2 | 15.02.2018 | முதல் தகவல் அறிக்கை |
| 3. | அ.சா.ஆ.3 | 15.02.2018 | பார்வை மகஜர் |
| 4. | அ.சா.ஆ.4 | 15.02.2018 | மாதிரி வரைபடம் |
| 5. | அ.சா.ஆ.5 | 15.02.2018 | பிரேத விசாரணை அறிக்கை |
| 6. | அ.சா.ஆ.6 | 16.02.2018 | TN 33 Z 2435 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| 7. | அ.சா.ஆ.7 | 16.02.2018 | TN 28 AB 6674 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| 8. | அ.சா.ஆ.8 | 15.02.2018 | KL 07 BK 9028 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| 9. | அ.சா.ஆ.9 | 15.02.2018 | பிரேத பரிசோதனை அறிக்கை |

**குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

இல்லை

**சான்றுப்பொருள்:**

இல்லை

**குறிப்பு:**

1. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கவில்லை.
2. குற்றம் சாட்டப்பட்டவர் பிணையில் இருந்தார்.
3. வழக்கு முடிவு பற்றி காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.27 17:05:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.